IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

OS.No. 22/2024

dated : 04.11.2025

D.W.2

Name திருமலைச்சாமி

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

எனக்கு மூன்று மக்கள் உள்ளார்கள். எனது திருமண தேதி ஞாபகம் இல்லை. என் மக்களின் பிறந்த தேதி ஞாபகம் இல்லை. சுப்பிரமணியன் இறந்த தேதி எனக்கு தெரியாது. அவருக்கு என்னென்ன பூர்விக சொத்துக்கள் என்றும், என்னென்ன சொத்துக்கள் சுயசம்பாத்திய சொத்துககள் என்றும் எனக்கு தெரியாது, நஞ்சை, புஞ்சை எவ்வளவு விஸ்தீரணம் என்று எனக்கு தெரியாது. எந்தெந்த வீடு பூர்விகமாக பாத்தியப்பட்டது என்றும், எந்தெந்த வீடு சுயார்ஜித சொத்து என்றும் எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலத்தில் நான்தான் தகவல் சொன்னேன். பேச்சியம்மாள் என்பவர் குருசாமியின் அம்மா ஆவார். பேச்சியம்மாளுக்கு பங்கு ஏதும் கிடையாது. அவருக்கு ஏதும் தரவில்லை. சொத்துக்களை 3 பங்காக பிரித்தார்கள். மொத்தம் 1 -1/2 ஏக்கர் பாத்தியப்பட்டதை 3 பங்காக பிரித்தார்கள். நஞ்சை எவ்வளவு ஏக்கர் என்று தெரியாது. நஞ்சையில் பங்கு ஏதும்கொடுக்கவில்லை. நஞ்சை நிலமே இல்லை. எந்தெந்த புல எண்ணில் கொடுத்தார்கள் என்றும் எனக்கு தெரியாது. குருசாமி எனக்கு வேண்டியவரா என்றால் வேண்டியவர்தான். வாதிகளும் வேண்டியவர்கள். பிரதிவாதி எனக்கு நெருக்கமான நண்பர் என்றும், அதனால் அவர் கேட்டுககொண்டதன்பேரில் அவர் கூறிய தகவல்களை முதல்விசாரணை வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன்

என்றால் சரியல்ல. இன்று தேதி, மாதம், வருடம் தெரியாது. பாகம் நடந்ததாக கூறப்படும் தேதி, மாதம், வருடம் எனக்கு தெரியாது. பிரதிவாதி கேட்டுக்கொண்டதன் பேரில் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னை குருசாமிதான் அழைத்து வந்தார் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் கூறியதுபோல் வாதி, பிரதிவாதி இடையே எந்த பாகமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. குருசாமி கேட்டுககொண்டதன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**ம.வி.: இல்லை**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.11.04 17:44:38 +0530